1973 டிசம்பர் 1]

காலமான பிறகு, அந்த இயக்கமே மெல்ல, மெல்ல—வேகமாகக்கூட என்று சொல்லலாம், மறைந்து கொண்டு வருகிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, சமீபகாலத்தில், இரண்டு மூன்று ஆண்டுக்காலத்தில் தமிழகத்தில் நக்சல்பாரிகளால் ஏற்பட்ட கொலைகள், கொள்ளைகள் எவ்வளவு ? இன்றையதினம் நக்சல் பாரிகள் என்ற பெயரால் தமிழக சிறைச்சாலைகளில் எத்தனை கைதிகள் இருக்கின்றார்கள் என்று தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இந்த நக்சல் பாரிகள் இயக்கத்தின் சம்பந்தமாக நடைபெற்ற கொலைகள் ஏழு, கொள்ளைகள், பெரிய கொள்ளைகள் நான்கு. சம்பந்தப்பட்ட 67 பேர் இரண்டு மாதங்கள் முதல் 7 வருஷம்வரை தண்டனை பெற்று, இப்பொழுது சிறைகளில் இருக்கிறார்கள். இந்தக் கொலைக்குற்றம் சாட்டப்பட்டவர்களில் 6 பேர் மரண தண்டனை பெற்றிருக்கிறார்கள்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, தமிழகத்தில் இந்த நக்சலைட் இயக்க தினுடைய பெருந் தலைவர் என்று சொல்லப்பட்ட கலியபெருமாள் மரண தண்டனை பெற்று அதை இந்த அரசு ஆயுள் தண்டனையாக மாற்றியிருப்பது, அந்த இயக்கத்தை இங்கே வளர்த்துவிட உதவிவிடுமா? அதை அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஆயுள் தண்டனை என்றால், உடனடியாக விடுதலை செய்து விடுவது என்பதல்ல. மனம் திருந்துவார் என்ற நம்பிக்கையோடு அந்த மாற்றம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

புலவர் ஒ. அறிவுடைநம்பி : தலைவரவர்களே, நக்சல்பாரிகளால் பழி வாங்கப்பட்ட அல்லது அவர்களுடைய தாக்குதலுக்கு ஆளான காவல் துறையினருக்குப் பரிசு வழங்க அரசிடம் ஏதாவது செயற் குறிப்பு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இது போன்ற வீரச் செயல்களில் ஈடுபாடு கொண்ட காவல் துறையினருக்கு கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக அறிஞர் அண்ணா பிறந்த நாள் அன்று தமிழக முதலமைச்சர் பதக்கம் என்ற பெயரால் பதக்கமும் பொற்கிழிகளும் அளிக்கப்பட்டு, வருகின்றன. அந்தப் பட்டியலில் இது போன்ற செயல்கள் இருந்தால், சேர்க்கப்படுவார்கள்.

Tamil Nadu Forensic Science and Chemical Laboratory.

*169. Thiru. N. Sundaresa Thever (On behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Forensic Science and Chemical Laboratory has rendered any assistance to the Interpol Projects ; and

(*b*) if so, the details thereof ?

தமிழ்நாடு குற்றஞ்சார்ந்த அறிவியல் இரசாயன ஆய்வுக் கூடம்.

திரு. என். சுந்தரேசத் தேவர் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு குற்றஞ்சார்ந்த அறிவியல்-இரசாயன ஆய்வுக்கூடம் அனைத்து நாட்டு காவல் துறை திட்டங்களுக்கு (**Interpol Projects**) ஏதேனும் உதவி புரிந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) குற்றஞ்சார்ந்த வழக்குகளில் கண்டுபிடித்தூள்கள் பரிசோதனையில் தமிழ் நாடு குற்றஞ்சார்ந்த அறிவியல் இரசாயன ஆய்வுக் கூடம் அனைத்து நாடுகள் காவல் நிறுவனத்தின் (**Interpol**) உடனுழைப்புடன், ஆராய்ச்சியினை மேற்கொள்ள கொள்கை அளவில் ஒப்புக் கொண்டுள்ளது. ஆராய்ச்சித் திட்ட விவரங்கள் தயாரிக்கப்படவில்லை. இது வரையில் எந்த விதமான உதவியும் அளிக்கப்படவில்லை.

Deep X-Ray Therapy Unit.

***173. Q. THIRU G. SWAMINATHAN :** Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that a Deep X-ray Therapy Unit is to be purchased for installation at Rajah Mirasdar Government Hospital Thanjavur ; and

(*b*) if so, the reason for purchasing the same instead of a Cobalt Therapy Unit ?

நுணுக்கமான எக்ஸ் கதிர் சிகிச்சை இயந்திரப் பிரிவு.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர், ராஜா மிராசுதார் அரசு மருத்துவமனையில் நிறுவப் படுவதற்காக நுணுக்கமான எக்ஸ் கதிர் சிகிச்சை இயந்திரப் பிரிவு வாங்கப்படவிருக்கிறதென்பது உண்மையா ?

(இ) ஆமெனில், கோபால்ட் சிகிச்சை இயந்திரப் பிரிவுக்குப் பதிலாக மேற்சொன்ன இயந்திரப் பிரிவை வாங்குவதற்கான காரணம் யாது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.